R4913

# THE ROYAL DIADEM

# ராஜ முடி

"புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்... நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜ முடியுமாயிருப்பாய். " ஏசாயா 62:2,3

எரேமியா தீர்க்கதரிசி ஒரு இடத்தில் அறிவிக்கிறதாவது: "அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற யேகோவா என்பதே." இன்னொரு இடத்தில் அவர் கூறுகிறதாவது: "அவர் எங்கள் நீதியாயிருக்கிற யேகோவா என்பது அவருடைய நாமம்." இது போல அப்போஸ்தலரும் அறிவிப்பதாவது: "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு." (எரேமியா 23:6; 33:16; 2 கொரிந்தியர் 5:21)

இந்த அறிக்கைகள் எல்லாம் சீயோனைக் குறிக்கிறது. நிழலான (அடையாளமான) சீயோன் யூத தேசமாகும். மெய்யான சீயோன் மகிமையடைந்த கிறிஸ்து. சபைக்கான ஆசீர்வாதங்கள் ஆவிக்குரிய தளத்திற்குரியது என்றும் பூமிக்குரிய தளத்தில் என்றென்றைக்கும் தெய்வீக கிருபையில் இருக்கும் பழைய ஏற்பாட்டுக்கால பாத்திரருக்கு இருக்கும் என்றும் நாம் மிகவும் சரியாக புரிந்து கொள்ளலாம்.

"அலங்காரமான கிரீடம்" மற்றும் "ராஜ முடி" என்ற இரு சொற்றொடரும் ஒரே அர்த்தமுடையது. இரு தடவை வந்திருப்பதால் அதிக முக்கியத்துவம் பெறுகிறது. ராஜ முடி என்பது கிரீடம். கிரீடங்கள் பொதுவாக அதை அணிந்திருப்பவர்களின் மதிப்பையும் கனத்தையும் சேர்க்கிறது. ஆனால் வேதாகம சொற்றொடர் "அலங்காரமான கிரீடம்... உன் தேவனுடைய கரத்தில் ராஜ முடியாயிருப்பாய்." இது தேவனுக்கு மகிமை கொடுப்பதற்காக அணியப்படுவதில்லை. இதற்கு பதிலாக தெய்வீக கரத்தில் ஒரு அழகான ஆபரணத்தைக் குறிக்கிறது. நீங்கள் எதையாவது கையில் எடுத்துச் செல்லும் போது அதன் வேலைப்பாடும் அழகும் காணப்படுவது போல இது இருக்கிறது.

இந்த ஆபரணம் மகா பெரிய சிற்பாசாரியால் சரியானபடி சோதிக்கப்படும் போது அந்த முடி அழகானதாக ஆக்கப்படும். கர்த்தர் அவரது ஆபரணங்களை அலங்காரம் செய்யவும் பத்திரப்படுத்தவும் வருவார். "தேவன் அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்." எதிர்காலத்தில் ராஜ்ய நிலைமையில் அவயவங்களை இறுதியாக வைக்கிற காரியத்தை வசனம் குறிப்பிடுகிறது. மகிமையில் நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் வேறுபடுவது போல ஆபரணங்கள் இடத்தையும் வைக்கப்படுதலையும் பொறுத்து மாறுபடுகிறது. இந்த காலத்திற்கும் பொருந்தும். தற்கால ஏற்பாடுகள், தனிப்பட்டவர்கள் தேவனுடைய சித்தத்திற்கு முழுவதுமாக கீழ்ப்படிவர்களா அல்லது மாட்டார்களா என்பதைப் பொருத்து மாறக்கூடியதாக இருக்கிறது. ஆபரண வகுப்பாரை தெரிந்தெடுத்தல் அங்கே இருந்திருக்கிறது. சுவிசேஷ யுகத்தில் இந்த வகுப்பாரின் அனுபவங்கள் மெருகூட்டும் செயல்முறையாக இருக்கிறது. சபை நிறைவை அடையும் போது, இந்த யுக முடிவில் அவயவங்களை பொருத்துகிற வேலை நடைபெறும். முதலாம் உயிர்த்தெழுதலின் போது இது ஆரம்பித்தது.

ராஜ முடியில் முதலாவது பொருத்தப்பட்டவர் சந்தேகத்திற்கிடமில்லாமல் நமது கர்த்தராகிய இயேசுவேயாகும். யேகோவா தேவனின் கையிலிருக்கும் ராஜ முடியில் முதலாவதாக அவர் இருக்கிறார். முதலாம் உயிர்த்தெழுதலில் பூரணராக்கப்படுவதால் சரீர அங்கங்கள் அடுத்ததாக வருவார்கள். அப்போஸ்தலர் நித்திரையிலிருக்கும் பரிசுத்தவான்கள் ஒவ்வொருவரும், "ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாகுதல்" கொடுக்கப்பட்டிருப்பதால் பொருத்தப்படுகிறார்கள். ஒவ்வொரு ஆபரணமும் தயாரானதைக் கண்ட யேகோவா தேவன் குறிப்பிட்ட இடத்தில் பொருத்துகிறார்.

யாக்கோபு மற்றும் யோவானின் தாயார் அவர்களுடன் இயேசுவிடம் சென்று, அவளது மகன்கள் அவரது வலது பக்கத்தில் ஒருவரும் இடது பக்கத்தில் ஒருவருமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டாள். அதற்கு அவர் அந்த இடங்கள் யாருக்கென்று பிதாவானவரால் ஆயத்தப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கே கிடைக்கும் என்றார். அந்த இடங்கள் சலுகையின்படி கேட்கப்படாமல் நீதியின்படி கொடுக்கப்படுகிறது. இந்த குழுவில் எந்த இடமும் மகிமையானது தான். அவர் வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் யார் உட்காருவார்கள் என்று சொல்ல தேவன் திறமையுள்ளவர் நமது தேவன் மட்டுமே. அவரது சித்தம் நிறைவேறுவதில் நாம் சந்தோஷமடைவோம். திரைக்கப்பால் பரந்த நீதியின்படியே இருக்கும். பிதாவானவர் அதை ஏற்பாடு செய்திருப்பதால் நாம் சந்தோஷம் அடைவோம்.

கர்த்தர் முதலாவதாக இருக்கிறார். அடுத்தபடியாக பரிசுத்த பவுல் இருப்பார் என்று நினைக்கிறோம். பரிசுத்த பேதுரு மற்றும் பரிசுத்த யோவானும் பிரதானமான இடத்தில் இருப்பார்கள் என்று நினைக்கிறோம். பிதாவானவர் எதை தீர்மானம் பண்ணுகிறாரோ அதில் நாம் பரிபூரண திருப்தியும் சந்தோஷமும் அடைவோம். எந்த இடமாயிருந்தாலும் நாம் சந்தோஷம் அடைவோம். இந்த ஆவியும் இந்த குணலட்சணமும் இல்லாதவர்கள் அந்த வகுப்பில் கர்த்தர் இருக்கிற அங்கு இருக்க மாட்டார்கள். அந்த வகுப்பில், இருக்கப் போகிறவர்கள் பிதாவானவரின் கட்டளையை ஏற்றுக்கொண்டு, எதற்காக அவர்கள் வடிவமைக்கப்பட்டிருந்தாலும், அதை விருப்பத்துடன் ஏற்றுக்கொள்வார்கள்.

ஆகையால் தேவனுடைய கையில் இருக்கும் சபையானது தெய்வீக வல்லமையின் கரத்தில் இருக்கும் சபையாக இருக்கிறது. அந்த வல்லமையானது சபையை பயன்படுத்தும். சபையானது மகிமையின் கிரீடமாகவும் அழகான ஒன்றாகவும்

இருந்து அது நித்தியத்துக்கும் தேவனுடைய வேலைப்பாட்டின் மகிமையை பிரதிபலிக்கும். அது எவ்வளவு மகிமையாக இருக்கும்! எவ்வளவு அழகாக இருக்கும்! கர்த்தராகிய யேகோவா இந்த விலையேறப்பெற்ற ஆபரணங்களை ஒன்றின்மேல் ஒன்று பிரதிபலிக்கும்படி மகிமையின் கிரீடத்திலும் அழகான ராஜ முடியிலும் பொருத்துவார். கர்த்தராகிய இயேசு அதில் பிரதானமான இடத்தில் இருப்பார். ஏனெனில் பிதாவானவர் கர்த்தராகிய இயேசுவுக்கு கொடுக்காத மகிமையை சபைக்கு கொடுக்கமாட்டார். சபையானது மனிதர்களுக்கு முன்பாக தேவனுடைய கை வேலையில் “அழகான ஒன்றாகவும் நித்திய சந்தோஷமாகவும்” வெளிப்படுத்தப்படும்.

அவர் இப்பொழுது ஆபரணங்களை தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கிறார். அவர் அவர்களிடம் தற்காலிகமாக தொடர்பு கொண்டிருக்கிறார். மெருகூட்டும் வேலை நிறைவடையும் போது அவர்களை மிகவும் விசேஷித்த விதமாக ஆயிரம் வருட யுகத்தில் பயன்படுத்துவார். ஒரு நட்சத்திரம் மகிமையில் ஜொலிக்கிறது போல சபையின் அங்கங்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் பயன்படுத்துவார். ஆனால் சபையின் பயன், கர்த்தர் எந்த அளவுக்கு பயன்படுத்த நோக்கம் கொண்டிருக்கிறாரோ அதில் ஒரு பகுதி தான் பயன்படுத்துவார். அப்போஸ்தலர் கூறுகிறதாவது: “தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் இயேசு கிறிஸ்துவுக்குள் விளங்கச் செய்வார்.”எபேசியர் 2:7.

கிறிஸ்துவுக்குள் இருக்கிற அனைவருக்கும், கிறிஸ்துவின் சரீரத்தில் தெரிந்துகொள்ளப்பட்ட அனைவருக்கும் அவரது மேன்மையான கிருபையை காண்பிப்பார். அவரது கிருபையும் இரக்கமும் சபையின் மேல் பொழியப்படும். உலகமானது முடிவாக தேவனுடைய சிருஷ்டிப்பின் வேலையின் உச்சக்கட்டத்தை சபையில் பார்க்கும். சபையின் மகிமை தேவதூதர்கள் மற்றும் மனிதரின் பார்வைக்கு வெளிப்படுத்தப்படும். நமது “அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்துவதில்” நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால் கர்த்தர் குறிப்பிடுகிற ஆசீர்வாதங்கள் நம்முடையது என்று குறிப்பிடுகிறார்.

நாம் உலகத்திலிருந்தும் மாபெரும் ஸ்தாபனமாகிய பேர் கிறிஸ்தவ சபைகளிலும் பிரித்தெடுக்கப்பட்ட “சொந்த ஜனங்கள்” என்பதை நாம் மறவாதிருப்போமாக. நாம் மேலான நம்பிக்கைகள், நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களைப் பெற்று, தேவனுடைய ஆழமான காரியங்களில் தெளிவான நுண்ணறிவையும் பெற்று, நமது பழைய அந்தகாரத்திலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கும் அழைக்கப்பட்டிருக்கிறோம். இப்படியாக உலகத்திலிருந்தும், உலக ஆவியில் அதிகமாக பங்கு பெறுகிற கிறிஸ்தவர்களிடமிருந்தும் பிரிக்கப்பட்டிருந்தால், அவர்கள் நம்முடன் இணக்கமாக இல்லாதிருப்பதிலும், ஆண்டவருடைய சித்தத்தை நாம் நிறைவேற்றுவதில் நம்மை அவர்கள் அசட்டை பண்ணுவதிலும் எதிர்ப்பதிலும் என்ன ஆச்சரியம் இருக்கிறது.